ஒசூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை – திரு.அ.முனிராஜ், எம்.ஏ., பி.எட்.,

 மூ.மு. எண்.1278/அ7 /2022, நாள் 22.09.2022

பொருள் புதிய ப்ரீ ஸ்கூல் – ஸ்பூரூட்ஸ் கிட்ஸ் மழலையர் பள்ளி, ஒசூர் ஒன்றியம் – 2009 ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் வரும் செயல்நோக்கத்திற்காக 2010 ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமை விதிகளில் 15 ஆம் விதியைச் சேர்ந்த ( 4) துணை விதியின் கீழ் பள்ளிகளுக்கு புதிய ப்ரீ ஸ்கூல் தற்காலிக தொடர் அங்கீகாரம் புதுப்பித்தல் ஆணை வழங்க அனுமதி கோருதல் – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை எண்.145 பள்ளிக் கல்வித்துறை நாள் 17.07.2018.
2. ஒசூர் வட்டாரக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண். 446 / அ5 / 2022, நாள் 25.04.2022.
3.பள்ளித்தாளாளரின் கடித நாள்: 18.04.2022

--------

ஒசூர் வட்டாரக் கல்வி அலுவரின் மேலொப்பமிடப்பட்டுள்ள ஒசூர் வட்டாரக் கல்வி அலுவலரின் பரிந்துரையினை ஏற்றும், 24.04.2022 அன்று ஒசூர் வட்டாரக் கல்வி அலுவலரின் நேரடி ஆய்வின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஸ்பூரூட்ஸ் கிட்ஸ் மழலையர் பள்ளி 01.03.2022 முதல் 28.02.2025 வரை கீழ்க்காணும் நிபந்தனைகளின் பேரில் தற்காலிக தொடர் அங்கீகாரம் ஆனை ஒப்புதல் பார்வை 1ல் காண் அரசாணையின் படி வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | ஸ்பூரூட்ஸ் கிட்ஸ் மழலையர் பள்ளி ,<br>பிளாட் நெ:13,நிமிஷாம்பா தேவி லே அவுட் சூசுவாடி<br>ஒசூர் – 635 109,<br>ஒசூர் ஒன்றியம்.. |
| மாவட்டம் | கிருஷ்ணகிரி மாவட்டம். |
| வகுப்பு | ப்ரி கே.ஜி முதல் யூ.கே.ஜி. வரை |

பின்வரும் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கு உட்பட்டு, மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 01 | பள்ளிக்கான இந்த அங்கீகாரம் நீட்டிக்கத்தக்கதல்ல மற்றும் யூ.கே.ஜி. வகுப்பு அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு செல்வாக்கின் அடிப்படையில் அங்கீகாரம் அளிப்பது / இணைப்பது இதற்கு எவ்வகையிலும் பொருந்தாது. |
| 02 | 2009 ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமைச்சட்டத்தின் விதித் துறைகள் மற்றும் 2010 ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமை விதிகளை பள்ளிகள் பின்பற்ற வேண்டும். |
| 03 | அனுமதி கால அளவு முடியும் வரையில், பள்ளியின் சுற்று வட்டாரப் பகுதிகளிலுள்ள நலிவுள்ள பிரிவினர் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினைச் சேர்ந்த இவர்களின் மொத்த எண்ணிக்கையில் 25% வரையில் 1 – ல் சேர்த்துக் கொள்ள வேண்டும். ( அந்தந்த நேர்விற்கேற்ப தொடக்கக் கல்விக்கு முந்தைய வகுப்பிற்கும் இவ்விதிகள் பொருந்தும் ) |
| 04 | பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள சிறார்களுக்கு இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலுள்ள விதித் துறைகளுக்கிணங்க, பள்ளிகள் செலவுத் தொகையை திருப்பிச் |

| | |
|---|---|
| | செலுத்த வேண்டும். இவ்வாறு திருப்பிச் செலுத்தப்படும் தொகையைப் பெறுவதற்கு பள்ளி தனி வங்கிக் கணக்கு ஒன்றை வைத்துவர வேண்டும். |
| 05 | சங்க / பள்ளி, எந்தவொரு நன்கொடை கட்டணத்தையும் வசூலிக்கக்கூடாது மற்றும் சிறார்களை அல்லது அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களை எந்தவொரு பரிசோதனை நடைமுறைக்கும் உட்படுத்தக்கூடாது. |
| 06 | எந்தவொரு சிறாரும் பள்ளியில் சேருவதற்கு பள்ளி யாதொரு மறுப்பையும் தெரிவிக்கக் கூடாது. |
| (A) | பள்ளி சேர்க்கைக்கு பரிந்துரைக்கப்பட்ட கால வரையறை நீட்டிக்கப்பட்டதையடுத்து, பள்ளியில் சேர வரும் எந்தவொரு சிறாரையும் வயது சான்று இல்லாததால் பள்ளியில் சேருவதற்கு பள்ளி யாதொரு மறுப்பையும் தெரிவிக்கக் கூடாது. |
| (B) | சமயம், சாதி அல்லது இனம், பிறந்த இடம் ஆகியவற்றை அடிப்படையிலும், பள்ளியில் சேரும் சிறார்களின் உரிமை மறுக்கப்படக்கூடாது. பள்ளியானது பின்வரும் கோட்பாடுகளை உறுதி செய்ய வேண்டும்.<br>(lvii) சிறார்களை தொடக்கக் கல்வி கால அளவு முடிவடையும் வரை எந்த வகுப்பிலும் தகுதி நீக்கம் அல்லது பள்ளியிலிருந்து வெளியேற்றக் கூடாது.<br>(lviii) எந்தவொரு சிறாருக்கும் உடல் ரீதியான அல்லது மன உளைச்சலுக்கு உட்படும் தண்டனையை வழங்கக்கூடாது.<br>(lix) தொடக்கக் கல்வி முடியும் வரையில் பள்ளிக் குழுமம் நடத்தும் எந்தவொரு நேர்விலும் தேர்ச்சி பெறத் தேவையில்லை.<br>(lx) 25 ஆம் விதியின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, தொடக்கக் கல்வி முடிக்கும் ஒவ்வொரு சிறாருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.<br>(lxi) இச்சட்டத்தின் விதித் துறைகளின்படி, தனி கவனம் செலுத்த வேண்டிய மாற்றுத் திறனாளி மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.<br>(lxii) இச்சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, குறைந்தளவு கல்வித் தகுதியுடன் ஆசிரியர்கள் பணியில் நியமிக்கப்படுகின்றார். ஆனால் இச்சட்டம் செயல்படத் தொடங்கி போது, குறைந்தளவு கல்வித் தகுதியைப் பெற்றிராத நடப்பு ஆசிரியர்கள், தங்களுடைய 5 ஆண்டு பணிக்காலத்திற்குள் இத்தகைய குறைந்தளவு கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.<br>(lxiii) இச்சட்டத்தின் 24 (1 ) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பணிப்பொறுப்புகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.<br>(lxiv) தனிப்பட்ட பயிற்று நடவடிக்கைகளில் எந்தவொரு ஆசிரியரும் ஈடுபடக்கூடாது. |
| 07 | உரிய அதிகார மன்றம் வரையறுத்துள்ள அடிப்படையிலான பாடத் திட்டத்தை, பள்ளிகள் பின்பற்ற வேண்டும். |
| 08 | இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பள்ளியின் தரங்களைவும், கோட்பாடுகளையும் பள்ளிகள் வைத்துவர வேண்டும். |
| 09 | பள்ளி வளாகத்திற்குள் அல்லது வேறு இடத்தில் அதே பள்ளி பெயரிலான பள்ளிகளில் அங்கீகாரம் அளிக்கப்படாத வகுப்புகள் நடத்தப்படக் கூடாது. |
| 10 | கல்வி மற்றும் திறன் வளர்ச்சி மேம்பாடு தொடர்பான நோக்கங்களுக்காக மட்டுமே, பள்ளிக் கட்டிடங்கள் அல்லது ஏனைய கட்டுமானங்கள் அல்லது பள்ளி மைதானங்களை பயன்படுத்துகிறது. |
| 11 | 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் ( மத்தியச் சட்டம் 21 / 1860) கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் வாயிலாக அல்லது தற்போது செயலலிருக்கும் எந்தவொரு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பொது அறங்காவலர்களால் பள்ளி செயல்படுகிறது. |

| | |
|---|---|
| 12 | எந்தவொரு தனி நபர், குழு அல்லது தனி நபர்கள் அடங்கிய சங்கம் அல்லது ஏனைய பிற நபர்களின் ஆதாயத்திற்காகப் பள்ளி நடத்தப்படவில்லை. |
| 13 | கணக்குகள் தணிக்கையிடப்பட்டு பட்டயக் கணக்கர்களால் சான்றளிக்கப்படவேண்டும் மற்றும் முறையான கணக்குகள் பற்றிய விவர அறிக்கைள், விதகளின்படி தயாரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்கு விவர அறிக்கைகளின் நகல் ஒவ்வொன்றும், மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். |
| 14 | உங்களுடைய பள்ளிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளி அங்கீகார குறியீட்டு எண் இந்த அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்ற கடிதங்களில் இக்குறியீட்டு எண் குறிப்பிடப்படலாம். |
| 15 | கல்வித் துறை இயக்குநர் / மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து அவ்வப்போது கோரப்படுகின்றவாறு பள்ளி நிர்வாகம் அனுப்பி வைக்கப்படுகின்றது. இத்தைய அறிக்கைகள் மற்றும் தகவல்கள், பள்ளி அங்கீகார நிபந்தனைகள் தொடர்ந்து முழுமையாக பாதுகாக்கப்படும் வகையிலும் அல்லது பள்ளிச் செயல்முறைகளிலுள்ள குறைபாடுகளைக் களைவதற்கும் மாநில அரசு / உள்ளூர் கல்வி அதிகார மன்றம் பிறப்பிக்கப்படுகின்ற இத்தகைய கட்டளைகளுக்கு இணங்க இருக்கின்றன. |
| 16 | சங்கங்களின் பதிவு புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தால் அவை புதுப்பிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. |
| 17 | இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவரான ஏனைய நிபந்தனைகள் இணைக்கப்பட்டுள்ளது. |
| 18 | யாதொரு சட்ட விதித்துறைகள், விதிகள் அங்கீகார நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டால் மற்றும் இது நிரூபிக்கப்பட்டால் பள்ளி அங்கீகாரம் திரும்பப் பெறப்படும். |

நிபந்தனைகள்

அரசு விதிகளின்படி குழந்தைகள் தரமான கல்வி கற்க உகந்த சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.மேலும் (A,B,C,)மற்றும் (FORM-D)சான்று குறிப்பிட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப பள்ளியில் மாணவர்கள்சேர்கை மேற்க்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

22/9/22

*மாவட்டக் கல்வி அலுவலர்,*
*ஓசூர்.*

22/9/22

பெறுதல்

ஸ்பூருட்ஸ் கிட்ஸ் மழலையர் பள்ளி ,
பிளாட் நெ:13,நிமிஷாம்பா தேவி லே அவுட் சூசூவாடி
ஓசூர் – 635 109,
ஓசூர் ஒன்றியம்.

**நகல் – வட்டாரக் கல்வி அலுவலர், ஓசூர்.**